# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 48

செப்டம்பர் 2012

தொகுப்பு : Dr. B. வில்லியம் தர்ம ராஜா

**எரேமியா**

2351 உன் தரிசு நிலத்தைப் பண்படுத்து (4:3)
2352 பொல்லாப்பான கிரியைகள் வேண்டாம் (4:4,22, 52:2)
2353 கர்த்தருக்கென்று உன்னை விருத்தசேதனம் பண்ணி, உன் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடு (4:4)
2354 நீ இரட்சிக்கப்படும் படிக்கு, உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு (4:14)
2355 மதியற்றவனாயிராதே (4:22)
2356 உணர்வோடிரு (4:22)
2357 நன்மை செய் (4:22)
2358 நியாயஞ் செய் (5:1)
2359 சத்தியத்தைத் தேடு (5:1)
2360 பொய்யாணையிடாதே (5:2)
2361 புத்தியை ஏற்றுக்கொள் (5:3)
2362 கர்த்தருடைய வழியையும் தேவனுடைய நியாயத்தையும் அறி (5:4)
2363 உன் வீடு கபடங்களற்றிருப்பதாக (5:27)
2364 துன்மார்க்கனுடைய செயல்களைக் கண்டிக்காமல் விடாதே (5:28)
2365 திக்கற்றவனுடைய வழக்கை விசாரி (5:28)
2366 எளியவர்களின் நியாயத்தைத் தீர் (5:28)
2367 கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லாதே (5:31)
2368 கர்த்தருடைய வசனத்தின் மேல் பிரியமாயிரு (6:10)
2369 பொருளாசைக்காரனாயிராதே (6:13, 8:10)
2370 பொய்யனாயிராதே (6:13, 8:10)
2371 சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்காதே; அது அருவருப்பான செயல் (6:14,15, 8:11)
2372 நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நட (6:16)
2373 கர்த்தருடைய வார்த்தைகளை / சொல்லைக் கேள் (6:19, 7:2,26 29:18,19,20, 34:4)
2374 நியாயப்பிரமாணத்துக்குச் செவிகொடு; வெறுத்துவிடாதே (6:19, 16:11)
2375 உன் வழிகளையும், உன் கிரியைகளையும் நன்றாய்ச் சீர்ப்படுத்து (7:35)
2376 மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர் (7:5)
2377 பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காதே (7:6)
2378 உனக்குக் கேடுண்டாக அந்நிய தேவர்களைப் பின்பற்றாதே (7:6,9)
2379 திருடாதே (7:9)
2380 கொலை செய்யாதே (7:9)
2381 விபசாரம் பண்ணாதே (7:9)
2382 பொய்யானையிடாதே (7:9)



2383 கர்த்தருடைய வாக்குக்குச் செவிகொடு (7:23)
2384 நான் உனக்குக் கற்பிக்கும் எல்லா வழிகளிலும், நீ உனக்கு நன்மையுண்டாகும்படி நட (7:23)
2385 கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யாதே (7:30, 18:10)
2386 உன் அருவருப்புகளால் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தாதே (7:30)
2387 விழுந்து விட்டாயோ? எழுந்திரு. (8:4)
2388 வழித்தப்பிப் போனாயோ? திரும்பு (8:4)
2389 கபடத்தைப் பிடித்திராதே (8:5)
2390 உன் பொல்லாப்பினிமித்தம் மனஸ்தாபப்படு (8:6)
2391 கர்த்தரின் நியாயத்தை அறி (8:7)
2392 பொய்யைப் பிரயோகியாதே (9:3)
2393 கர்த்தரை அறி (9:3)
2394 உன் சிநேகிதனுக்கு(ம்) எச்சரிக்கையாயிரு; அவன் தூற்றித்திரிகிறான் (9:4)
2395 எந்தச் சகோதரனையும் நம்பாதிரு; அவன் மோசம் பண்ணுகிறான் (9:4)
2396 மெய்யைப் பேசாமல், உனக்கடுத்தவனை ஏமாற்றாதே (9:5)
2397 பொய்யைப் பேச உன் நாவைப் பழக்குவிக்காதே (9:5)
2398 அக்கிரமஞ் செய்ய உழைக்காதே (9:5)
2399 கபடத்தின் நடுவிலே குடியிருக்காதே (9:6)
2400 கபடம் பேசாதே (9:8)

## நீங்களும் ஊழியஞ் செய்யலாம்

நமது சிறுவர், இளைஞர், மாணவர் ஊழிய பிரிவான ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் நாம் இந்த ஆண்டு (ஜுலை 2012 முதல் ஜுன் 2013) **20 வாலிபர் முகாம்களும் 20 சிறுவர் முகாம்களும் 20 குடும்ப முகாம்கள் 10 மாணவர் முகாம்கள்** நடத்த திட்டமிட்டு ஜெபித்து வருகிறோம்.

இந்த முகாம்கள் எல்லா கிராமங்களில் நடைபெறும் கிராம எழுப்புதலுக்காக ஜெபியுங்கள். இந்த முகாம்களில் 100 முதல் 200 வரை சிறுவர்கள் வாலிபர்கள் கலந்து கொண்டு ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஆசீர்வதிக்கப்பட்டதை கடந்த ஆண்டுகளில் கண்டிருக்கிறோம்.

நீங்கள் இந்த முகாம்களின் செலவினத்தை பொறுப்பெடுக்க அன்புடன் அழைக்கிறோம். **1 முகாம் நடத்த ரூ. 10,000/–** வரை செலவாகும். நீங்கள் உங்கள் குடும்பத்தினர் சார்பாக ஒரு முகாமின் செலவை பொறுப்பெடுக்க முன் வாருங்கள் என ஜெபத்துடன் அழைக்கிறோம்.

உங்கள் குடும்ப சார்பாக நடத்தப்படும் முகாமின் இடம் உங்களுக்கு நடக்கும் தேதி யாவும் அறிவிக்கப்படும். நீங்கள் குடும்பமாக முகாமில் கலந்து கொள்ள வருவதானாலும் உங்களை அன்புடன் எதிர்பார்க்கிறோம். அந்த முகாமில் நீங்கள் எங்களுடன் இணைந்து ஊழியம் செய்யலாம். உங்கள் தாலந்து வரங்களை தேவனுக்காய் பயன்படுத்தலாம்.

அந்த முகாம் முடிந்ததும் அதன் போட்டோ பிரதிகளை நீங்கள் தேவனைத் துதிப்பதற்காக உங்களுக்கு அனுப்பி வைப்போம். *ஜெபியுங்கள்!*

*தாங்க முன் வாருங்கள்! எங்களோடு இணைந்து ஊழியம் செய்ய வாருங்கள்!*

நீங்கள் காணிக்கைகளை அனுப்ப எங்கள் முகவரி

**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்**

ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி–628 101.

# விசுவாசம் – ஆவியின் வரமாகிய விசுவாசம்

## *Gift of Faith*

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த இதழ்களில் ஆத்தும, சரீர இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தையும், தேவன்பேரில் வைக்கும் விசுவாசத்தையும் கற்று அறிந்து கொண்டோம். அதின் தொடர் செய்தியாக ஆவியின் வரமாகிய விசுவாசத்தைக் குறித்து இந்த இதழில் அறிந்து கொள்ள தேவன்தாமே உங்களுக்கு உதவி செய்வார் என விசுவாசிக்கிறேன். 1கொரி. 12:9ல் இவ்வாறாக வாசிக்கிறோம். வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே (பரிசுத்த ஆவியினாலே) விசுவாசமும் அளிக்கப்படுகிறது. ஆவியின் வரங்களைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் அடிகளார் தெளிவாக குறிப்பிடுகின்றார். ஞானத்தை போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களை செய்யும் சக்தி, தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளை பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல் பாஷைகளை வியாக்கியானம் செய்தல் (1கொரி. 12:8-10) இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார் (1கொரி. 12:11).

ஆவியின் வரமாகிய விசுவாசம் உங்கள் பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1கொரி. 12:7). எலியா நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் - a man just like us - நம்மைப்போல சுபாவமுள்ள மனுஷனாயிருந்தும் (யாக். 5:17) விசுவாசத்தினாலே கருத்தாய் ஜெபம் பண்ணி மூன்று வருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யாதபடி வானத்தின் பலகணிகளை அடைத்தான். மறுபடியும் மழை பெய்யும்படி வானத்தின் பலகணிகளை விசுவாசத்தினாலே திறந்தான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது. (யாக். 5:18). ஆவியின் வரமாகிய விசுவாசத்தை செயல்படுத்தினான். 'நம்மைப்போல' தனிமையை உணர்ந்தவன் – நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன் (1இரா. 19:10), பயந்தவன் – தன் பிராணனைக் காக்க பெயர்செபாவிற்கு புறப்பட்டு போனவன் (1இரா. 19:3). சோர்வுற்றவன் – தான் சாகவேண்டும் என்று கோரி :போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் (1இரா. 19:4) என ஜெபித்தவன். ஆனால் எலியா தேவபர்வதத்திற்கு கடந்து வந்தபோது (1இரா. 19:8. தன் மாம்ச கண்களை மறைத்து (1இரா. 19:13) அமர்ந்த மெல்லிய தேவசத்தத்தைக் கேட்டான் (1இரா. 19:12). அதன்பின் ஒரு பெரிய மாற்றத்தை அனுபவித்தான். நீ தனிமையானவன் அல்ல (பாகாலுக்கு முடங்காதிருக்கிற... ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் (1இரா. 19:18) என்பதையும் தான் பயப்படாமல் இஸ்ரவேலின் ராஜாவாக யெகூவை அபிஷேகம் பண்ண வேண்டும் என்பதையும் தான் சோர்ந்து போகாமல் எலிசாவை தன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம் பண்ண வேண்டும் (1இரா. 19:16) என்பதையும் அறிந்து கொண்டான். எனக்கு பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையில் தனிமை உணர்வு உள்ளவர்களாகவும், பயமுள்ளவர்களாகவும், சோர்வுற்றவர்களாகவும் இருக்கிறீர்களோ? ஆவியின் வரமாகிய விசுவாசத்தை பெற்றுக்கொள்ளுங்கள், செயல்படுத்துங்கள். செயல்வீரர்களாய், வீராங்கனைகளாய் மாறுவீர்கள்.



ஆவியின் வரமாகிய விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள எலியா செய்த காரியம் : முதலாவது அவன் தேவனுக்கு முன்பாக நின்றான். (1இரா. 17:1). "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான், "இரண்டாவது கர்த்தரின் வார்த்தையின்படியே கீழ்ப்படிகிறான் (1இரா. 17:15) மூன்றாவது தேவன் கொடுத்ததை ஏற்றுக்கொண்டான். (1இரா. 17:6). உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தினந்தோறும் தேவனுக்கு முன்பாக நிற்கிற பழக்கமுடையவர்களாய் மாற வேண்டும். தேவனுடைய சமூகத்தை தரிசிக்கும் அனுபவத்திற்குள்ளாய் கடந்து வர வேண்டும். தேவசமூகத்தில் நிற்கும்போது அவர் உங்களோடு பேசுகிற காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவ வார்த்தைகளுக்கு முழுமனதோடு கீழ்ப்படிவது உங்கள் விசுவாசத்தின் அளவை வளரச் செய்யும். தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு கொடுக்கிற காரியங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். என் தேவனால் எனக்கு எப்பொழுதும் நன்மையே உண்டாகும். எல்லாவற்றையும் அவர் நன்மைக்கு ஏதுவாகவே நடத்துவார், என்பதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உடையவர்களாய் நீங்கள் மாறும்பொழுது ஆவியின் வரமாகிய விசுவாசம் உங்களில் கிரியை செய்ய ஆரம்பித்துவிடுகிறது. இது தேவன் செய்கிற அதே கிரியைகளை நீங்களும் செய்ய முடியும். என்னை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். (யோவா. 14:12).

ஆவியின் வரமாகிய விசுவாசத்தை நீங்கள் உங்களில் எப்படி அடையாளம் கண்டு கொள்வீர்கள் என்றால் உங்கள் கிரியைகளினிமித்தமே, கிரியையில்லா விசுவாசத்தின் பலன் என்ன? (யாக். 2:14). கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்குமே (யாக். 2:20,26). "Faith apart from its works of obedience is dead" விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே (யாக். 2:22). Faith should be implemented by (good) works.

உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிபடுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி (யூதா 20) என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கிறார் (ரோமர் 1:10). அவ்வரங்களில் ஒன்றாகிய விசுவாசத்தில் பலப்படுங்கள். உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளமாய் வாழ முக்கியமான வரங்களை நாடுங்கள் (1கொரி. 12:31).ஆவியின் வரமாகிய விசுவாசத்தில் வளருங்கள். தொடர்ந்து மற்றும் ஒரு விசுவாசத்தைக் குறித்து அடுத்த இதழில் கற்றுக்கொள்ளுவோம். கற்றுக்கொண்டதையும் தேவனிடத்தில் பெற்றுக்கொண்டதையும் உங்கள் அன்றாட வாழ்க்கையின் கிரியைகளில் வெளிப்படுத்துங்கள்.


## 12மணி நேர உபவாச ஜெபம்

**இடம் : வானத்தின் வாசல் ஜெப மையம், சிவகாசி**

**நாள் : 29-9-2012 சனிக்கிழமை**

**நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி முடிய**

*தேசத்திற்காய், எழுப்புதலுக்காய் ஜெபிக்க வாருங்கள்.*

தொடர்பு : **திருமதி. S. குளோரி 9894714768, 04562-228632**

# ஆற்றவேண்டிய அருளுரையை மாற்றுவதா?

Dr. P. செல்வராஜ், கோவை

யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். மாற்கு 1:4.

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (இயேசு) – மாற்கு 1:14.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் தீர்க்கதரிசிகள் தேவனுடைய எச்சரிப்பை அறிவித்துக் கொண்டிருந்தார்களெனினும் மக்கள் மனந்திரும்பவில்லை. இரட்சகர் இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்ய வந்த யோவான் ஸ்நானகன் "மனந்திரும்புங்கள்" என்று வல்லமையாக அருளுரையாற்றினார். தொடர்ந்துவந்த இயேசுவும் "மனந்திரும்புங்கள்" என்று தம்முடைய உலக ஊழியத்தின் துவக்கத்திலேயே அறைகூவல் விடுத்தார்.

மனந்திரும்புங்கள் – பலருக்குப் பிடிக்காத சொல். பாவம் – அதுவும் பிடிக்காத சொல். பாவத்தின் பெறரைக் கூட மாற்றுகிவார்கள் பலர். பெலவீனம், மறதி, பழக்கதோஷம், ஜென்ம புத்தி, குடும்ப குணம், வயசுக்கோளாறு, ஜாலியாக என்பது போன்ற பல பெயர்கள். பாவத்தை நாம் எப்படி அழைத்தாலும் பாவம் பாவமே! பாவத்தைக் குறித்தும், அதனால் மனந்திரும்புதலின் அவசியத்தைக் குறித்தும் வெளிப்படையாக, நேரடியாக, கலப்படமின்றி, நீர்த்துப்போகாதவகையில் அருளுரையாற்றிக்கொண்டிருந்த போதகர் ஒருவரை சபையின் குழுவொன்று சந்திக்க சென்றதாம். குழுவில் சபைப் பணியாளர்களும் அடங்குவர்! சபை மக்களை போதகர் பயமுறுத்துகிறார் என்பது குழுவினரின் குற்றச்சாட்டு. பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த போதகர் ஒரு விஷமருந்து அடங்கிய பாட்டிலொன்றை எடுத்துவந்து அவர்களுக்குக் காட்டி அவர்களிடம் இந்த நிபந்தனையை விதித்தாராம் : "எனக்கு ஒரு உதவி செய்யுங்கள், நான் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறேன். உங்கள் வீடுகளில் இந்த பாட்டில் இருக்கும். அதன் மேலுள்ள லேபலை சுரண்டி எடுத்துவிட்டு 'ஆப்பிள் சாறு' எனும் லேபலை ஒட்டுங்கள். கூடவே,அழகான ஆப்பிள் பழங்களின் படமொன்றும் இருக்கட்டும்" விளைவாக என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துக்கொள்ளுங்கள். அவருடைய நேரடி அருளுரை தொடர்ந்தது. தட்டச்சுப் பிழைக்கு நாம் மிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பலர் பாவம் என்ற சொல்லுக்குப் பதிலாக பிழை, தவறு, கவனக்குறைவு, விபத்து போன்ற சொற்கள் பரவாயில்லை என்று கருதுகிறார்கள். எப்படி அழைத்தாலும் பாவம் பாவம்தானே! எசேக்கியேல் 33:8 என்ன கூறுகிறது? "நான் (கர்த்தர்) துன்மார்க்கனை நோக்கி : துன்மார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில், நீ (தீர்க்கதரிசி) (அவனைத்) தன் துன்மார்க்கத்தில் இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அதை அவனுக்குச் சொல்லாமற்போனால்... அவன் இரத்தப்பழியை உன் கையில் கேட்பேன்" பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப்போல் வெளிப்படையாக அருளுரை, அறைகூவல் வழங்கும் ஊழியர்கள் இன்று தேவை. அவர்களுக்கு சபைமக்களின் ஒத்துழைப்பு தேவை.



# தேவனைத் துதிப்போம் வாருங்கள்

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பட்டாண்டி விளை** **செப்டம்பர் 1**

கணேஷ்புரம் என்ற இடத்தில் நரிக்குறவர்கள் மத்தியில் VBS நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **திருக்களூர்**

ஏழு வயது சிறுமி கல்யாணிக்கு குடல்வாழ்வு ஆப்ரேஷனில் கர்த்தர் நல்ல சுகத்தைக் கொடுத்தார். கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

திருப்புளியங்குடி கிராமத்தில் அநேக ஆத்துமாக்களைச் சந்திக்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். மட்டுமல்லாது ஜெபவீடு கட்டுமானப்பணி தடையில்லாமல் நடைபெறுவதற்கு கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பணித்தளம்: **தூத்துக்குடி –1**

ஜெமிமா 12ம் வகுப்பு, கிருபா, பிரியா 10ம் வகுப்பு இவர்கள் எல்லாரும் அரசுத்தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தரைத் துதியுங்கள்.

பணித்தளம் : **பேட்மாநகரம்**

கிருபா என்ற சிறுமிக்கு டெங்கு காய்ச்சலிலிருந்து கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தம் : **சிவகாசி** **செப்டம்பர் 2**

சகோதரி. லீதியாள் அவர்களின் குடும்பத்தில் தேவன் கொடுத்த சமாதானத்திற்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். திருமதி நகோமி என்ற தாயாரின் கையில் இருந்த கட்டி மறைந்து போனதற்காய் கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம்.

பணித்தளம் : **பழையசெந்நெல்குளம்**

குடும்பமுகாம் நடத்த கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். புது செந்நெல்குளத்தில் அற்புதக் கூட்டம் நடத்த கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

ஆலயத்திற்கு இரண்டு மைக் வாங்க கர்த்தர் உதவி செய்தார் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

மாலையூரணிப்பட்டியில் உள்ள காளிமுருகன் என்ற சகோதரனுக்கு குடல் வால்வு வியாதியின் ஆப்ரேஷன் இல்லாமல் அற்புத சுகம் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். திருத்தங்களில் உள்ள சகோதரி ஜெபத்தாய் வீட்டைச் சுற்றிலும் பிசாசு மூலம் ஏவப்பட்ட கிரியைகளை கர்த்தர் தகர்த்துப்போட்டு சமாதானத்தை தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** **செப்டம்பர் 3**

சகோதரன் தர்மலிங்கம் அவர்களுக்கு கர்த்தர் நல்ல வீட்டைக்கட்ட உதவி செய்தார்.

கர்த்தரைத் துதியுங்கள். ஈஸ்வரன், ஞானமணி கூடாண்டி, பசுபதி ஆகிய நான்கு ஆத்துமாக்களை புதிதாக சபைக்கு தந்ததற்காகவும், ஈஸ்வரன், ஞானமணி தொடர்ந்து சபைக்கு வந்து கொண்டிருப்பதற்காகவும், ஈஸ்வரன் சகோதரனுக்கு பக்கவாத நோயிலிருந்து கர்த்தர் விடுதலை கொடுத்ததற்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **சாத்தூர்ரூரல்**

சாத்தூர் ஆலயத்தில் நடைபெற்ற இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில் விடுதி மாணவிகள் 70 பேர் கலந்து கொண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சாத்தூர் ஆலய ஆராதனைக்கு புதிதாக இரண்டு குடும்பங்கள் வருகிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பணித்தளம் : என். திருவேங்கடபுரம்

சகோதரன் ஈசாக்கு பஸ் விபத்திலிருந்து சிகிச்சை பெற்று நலமாக வீடு திரும்பியதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **தேவனுடைய கூடாரம் ஏழாயிரம்பண்ணை**

சிவசங்குபட்டி கிராமத்தில் உள்ள முத்துமாரி சகோதரியின் கணவருக்கு நிரந்தரமாக டிரைவர் வேலை கிடைக்கப் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். சகோதரி ஜோதிக்கு போலீஸ் செலக்ஷன் நுழைவுத் தேர்வில் வெற்றியைத் தந்த தேவனுக்கு ஸதோத்திரம்

### நெல்லை மாவட்டம்

பணித்தளம் : **வடமலாபுரம்** **செப்டம்பர் 4**

சகோதரன் யாக்கோபுக்கு இழுப்பு வியாதியிலிருந்து கர்த்தர் நல்ல சுகத்தைக் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

பணித்தளம் : **கீழத்தட்டப்பாறை**

ட்ரெம் செட், 2 சேர்ஸ், 1 மைசெட் கிடைக்க செய்யத்தக்க உள்ளங்களை ஏவிய தேவனை துதிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை**

சகோதரி. லெட்சுமியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் தந்த விடுதலைக்காக துதியுங்கள். சகோதரி சைலஜா தகப்பனாருக்கு விபத்திலிருந்து பூரண சுகத்தை கர்த்தர் தந்ததற்காக துதிப்போம்.

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி**

முத்துலெட்சுமி என்ற 12ம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு வயதுக்கேற்ற வளர்ச்சிக்காக ஜெபித்தோம். கர்த்தர் இந்நாளில் அந்த மகளுக்கு அற்புதம் செய்தார் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். நமது விசுவாசி சந்திரா அவர்கள் மகள் மெர்லின் திருமணத்தடைகள் நீங்க ஜெபித்தோம். கர்த்தர் தடைகளை நீக்கினார். மலர் நித்தியா சுகப்பிரவத்திற்காக ஜெபித்தோம். கர்த்தர் சுகப்பிரவத்தை கொடுத்தார். தேவனுக்கு நன்றி சொல்லுவோம். அமிர்த வள்ளிக்காக ஜெபித்தோம். கர்த்தர் அவர்கள் விருப்பத்தை நிவேற்றினார் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். ரூத் – யோவான் தம்பதியருக்கு குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்தோம். கர்த்தர் பெண் குழந்தை கொடுத்தார். தேவனுக்கு நன்றி சொல்லுவோம்.

### திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **தொட்டிப்பாளையம்** **செப்டம்பர் 5**



திருமணமாகி பத்து வருடங்களாக பிள்ளை இல்லாமல் இந்த சகோதரிக்கு நாச்சம்மாளுக்கு கர்த்தர் அழகான பெண் குழந்தையை கொடுத்தார் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

தொட்டி பாளையத்தில் சகோதரி நதியாவுக்கு பிரசவத்தின் போது இரண்டு ஆண் குழந்தையை கர்த்தர் கொடுத்ததற்காய் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். ஜூலை மாதம் 4ம் தேதி தொட்டிப்பாளையம் ஊழியம் 5வது ஆண்டில் பிரவேசிக்க கர்த்தர் கிருபை செய்தார் அன்று சுமார் 40 பேர் கூடி ஆராதித்தனர் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். தொட்டிப்பாளையம் ஐயா ஈசாக்கு அவர்களுக்கு வேலை செய்ய புதிய பெரிய தோட்டத்தை கர்த்தர் கொடுத்ததற்காய் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

### திண்டுக்கல் மாவட்டம்

மிஷனரி பிலிப்பு மகள் காருண்யாவுக்கு யூர்னில் அமீபாக்ஸின் என்ற கிருமி தாக்கி ஏற்பட்ட பெலவீனத்திலிருந்து முற்றிலும் பரிபூரண சுகம் கொடுத்து தேவன் அற்புதம் செய்த படியினால் தேவனுக்கு மகிமையுண்டாவதாக. VBS எந்தத் தடையில்லாமல் எடுக்க தேவன் உதவி செய்தார். 542 பிள்ளைகளை சந்திக்க தேவன் உதவினார் தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

### திருச்சி மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி** **செப்டம்பர் 6**

அருளானந்து ஆராதனை வர தடை செய்த மேலாளர் இப்போது தடை செய்யாமல் அனுப்ப செய்த தேவாதி தேவனை துதிப்போம்.

சீத்தப்பட்டி பஞ்சமணி அவர்களுக்கு தேவன் கட்டி கொடுத்துள்ள புதிய வீட்டிற்காக தேவனை துதிப்போம்.

**விஜயாபுரம்** – சாந்தகுமார் அவர்களுக்கு தேவன் கொடுத்த நல்ல வேலைக்காக துதிப்போம். மம்மத்தை கிரோஸ் ஆசிரியர் அவர்களுக்கு கொடுத்துள்ள நல்ல சுகத்திற்காக தேவனைத் துதிப்போம். கல்பாளையத்தான் பட்டி பிலவேந்திரன் அவர்களுக்கு தேவன் புதிய வாகனத்தினற்காக தேவனைத் துதிப்போம்.

**மணப்பாறை சகாயம்** அவர்கள் மகன் ஜோயல் MBA செய்முறை தேர்வில் தேவன் தந்துள்ள நல்ல வெற்றிற்காக தேவனைத் துதிப்போம்.

## பணித்தளங்களுக்காய் முழங்காலில்

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **சாத்தூர்** **செப்டம்பர் 7**

சகோதரி. முத்துலெட்சுமி அவர்களின் கணவர் கருப்பசாமி இரட்சிக்கப்பட்டு சபைக்கு கடந்து வரும்படியாய் ஜெபிப்போம். சகோதரர். வின்சென்ட், தனலெட்சுமி இருவரும் சேர்ந்து சபைக்கு வரும்படி ஜெபிப்போம். சகோதரி. கவிதா, ராணி அவர்களின் கணவர் ஆரோக்கியம் அடைந்து, இரட்சிக்கப்பட்டு சபைக்கு கடந்து வரும்படி ஜெபிப்போம். சகோதரர். வினோத், விக்னேஷ் இருவரும் ஒற்றுமையாய் இருந்து படிக்க ஜெபிப்போம். சகோதரி. கவிதா அவர்களின் கணவர் குவைத்தில் பாதுகாப்போடு வேலை செய்ய ஜெபியுங்கள். சகோதரி. கனிமேரி கணவருக்கு நல்ல வேலை கிடைக்கும்படி ஜெபியுங்கள்.

**பெரியகொல்லபட்டி** – கிராம மக்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

சகோதரி. சந்தனமாரிக்கு ஏற்ற துணை கிடைத்து திருமண காரியம் நடைபெற ஜெபிப்போம். சகோதரி. ஜமுனா அவர்களின் கணவருக்கு நரம்பு தளர்ச்சியிலிருந்து சுகம் கிடைக்கவும் ஆலயத்திற்கு கடந்து வரும்படி ஜெபிப்போம். சகோதரி. பாலகிருஷ்ணம்மாள் மகனுக்கு எதிர்காலத்தை ஆசீர்வதித்து தரும்படி ஜெபிப்போம்.

**கிருஷ்ணராஜபுரம்** – ஜானகிபாட்டிக்கு கால்வலி, இடுப்புவலி நீங்கி நல்ல சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**மேட்டூர் –** சகோதரி. பத்மா அவர்களின் பணத்தை வாங்கியவர்கள் திருப்ப பணத்தை கொடுக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை (தேவனுடைய கூடாரம்)** **செப்டம்பர் 8**

வள்ளி மயில் அம்மாவிற்கு தெளிவான கண்பார்வை உண்டாக, இவர்களுக்கு சேர வேண்டிய நிலம், வீடு நியாயமான முறையில் கிடைக்க, மூத்த மகளுக்கு ஆசிரிய பணி கிடைக்க, மகளுடைய குடும்பத்தில் உள்ள 2 லட்சம் கடனை அடைப்பதற்கு தேவன் கிரியை செய்யும்படியாக ஜெபிப்போம். சகோதரி. ஆனந்தி, அருள்மேரி இருவருக்கும் திருமண காரியம் நடைபெற ஜெபிப்போம். லதா என்ற சகோதரி 30 வருடமாக வாடகை வீட்டில் வாழ்கிறார்கள். சொந்தமாக வீடுகட்டி குடியிருக்கவும், கணவர் கணேசன் இரட்சிக்கப்படவும், கடன்பிரச்சை மாறவும், குடும்பத்தில் காணப்படும் சாபங்கள் நீங்க ஜெபிப்போம். ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிற திறப்பின் வாயில் ஜெபம், உபவாச ஜெபம், முழுஇரவு ஜெபத்திலும் அநேக ஆத்துமாக்கள் கலந்து கொண்டு ஜெபிக்க ஜெபிப்போம்.

**தேவனுடைய கூடாரத்தில்** காணப்படும் ஒவ்வொரு பொருட்கள் மீது தேவனுடைய பாதுகாவல் உண்டாக, கூடாரத்திற்கு முன்பாக ஆண்கள் யாரும் மது மருந்துவதற்கு வராமல் இருக்கவும், குப்பைகளை போடாமல் சுத்தமாக பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

**பழைய ஏழாயிரம்பண்ணை** – சகோதரர் ராஜேந்திரன் கடை வியாபாரம் ஆசீர்வாதமாய் நடைபெறவும், அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி**

சபைக்கு வெள்ளை அடிப்பதற்கு தேவைகள் சந்திக்கப்பட சகோதரி. அமுதா தொடர்ந்து சபைக்கு கடந்து வரவும் சபைக்கு கடந்து வருகிற முருகேசன், அய்யனார், சாமுவேல் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** **செப்டம்பர் 9**

தைலாகுளம் – சகோதர். அஜய் பி.இ. படிப்பதற்கு நல்ல கல்லூரியில் இடம் கிடைக்க

மல்லி – சகோதரர் ஸ்டீபன் பெற்றோருக்கு கீழ்ப்படிய, நல்ல வேலை கிடைக்க....

வெள்ளாகுளம் – சகோதரி. எஸ்தர் சபைக்கு வருவதற்கு பெற்றோர் மூலம் வருகிற தடைகள் மாற ஜெபியுங்கள்.

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

சபைக்கு விரோதமானவர்கள் மனம்மாறவும், பின்மாற்றம் ஆன விசுவாசிகள் சபைக்கு மீண்டும் வர ஜெபியுங்கள். சகோதரர் சுப்புராஜ், சீலன் சகோதரி சுமதி இவர்களின் வீடு கட்டுமான பணிக்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

சகோதரர் மாரிச்சாமி, ஜாண்பீட்டர் இவர்களுக்கு சரீரத்தில் நல்ல சுகம் கிடைக்க.... சகோதரி. லிங்கம்மாள், காளீஸ்வரபாண்டி இவர்களது குடும்பம் பிரிந்து வாழ்கிறார்கள். சமாதானமாக இணைந்து வாழ ஜெபியுங்கள்.



பணித்தளம் : செந்நெல்குளம்

புதுசெந்நெல்குளம் – சகோதரர் லட்சுமணன், சகோதரி. புஷ்பம் உடல்நலத்திற்காக ஜெபியுங்கள். சகோதரர். பன்னீர் செல்வத்திற்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்க...

கண்ணார்பட்டி – சகோதரர் பெருமாள், சகோதரி. பஞ்சவர்ணம் ஆவிக்குரிய வாழ்வு ஆவிக்குரிய வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சிவகாசி** **செப்டம்பர் 10**

**ஆசாரிகாலனி** – மது அருந்துகிற கோவிந்தராஜ் 8ம் வகுப்பு படிக்கிறான் மது பழக்கத்தில் இருந்து விடுபட.... புகை பிடிக்கிற பாக்கு போடுகிற சிறுவர்கள் பழக்கத்திலிருந்து விடுபடவும் சிறுவர் கூடுகையில் கலந்துகொள்ள ஜெபியுங்கள். ரெங்கபாசியம் நகரில் மாணவர் ஜெபக்குழு நடைபெறுவதற்கு ஏற்ற இடம் கிடைக்க ஜெபியுங்கள்.

**கோபால்நகர் –** சகோதரி. நாகலெட்சுமி அவர்கள் மகள் செல்வியின் பெலவீனம் மாறவும் கர்த்தர் அற்புத சுகத்தை கட்டளையிடும்படியான இவர்கள்குடும்பம் கர்த்தரில் நிலைத்து நிற்க, ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**பாரதிநகர்** – அமல் என்ற தாயாருடைய பெலவீனம் மாறவும் சகோதரி. எஸ்தர் லல்லி மகனுக்கு வேலையில் சம்பள உயர்வு கிடைக்க ஜெபியுங்கள். சகோதரி. சந்திரா அவர்களின் மகன் குடும்பத்தில் சமாதானம் காணப்பட ஜெபியுங்கள்.

இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில் கலந்து கொள்ளும் வாலிபர்கள் பாவங்களிலிருந்து விடுபடவும், பரிசுத்தமாக ஜீவிக்கவும் புறமதத்தில் இருந்து வரும் பிள்ளைகள் கர்த்தரில் நிலைத்து நிற்க ஜெபியுங்கள்.

**அம்மாப்பட்டி –** கிராமத்தில் சுவிஷேத்திற்கு திறந்தவாசல் உண்டாக ஜெபியுங்கள்.

**சிலோன்காலனி** – சகோதரி. ஜாஸ்மின் திருமண காரியம் கைகூடி வரவும், வீடு நல்லவிலைக்கு விற்கப்பட, தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**ராஜபாளையம்** – சகோதரர் குணசேகரனுக்கு இருதய ஆப்ரேஷன் செய்திருக்கிறார்கள். பரிபூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

**சிவகாசி** – 3 வயது குழந்தை சுவிட்சாவுக்கு அடிக்கடி வரும் காய்ச்சலில் பரிபூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள். சகோதரர். ஜோதி என்பவரின் திருமண காரியத்தை கர்த்தர் வாய்க்கப்பண்ணவும், குடும்பம் கர்த்தருக்குள் அதிகமாய் பலப்பட ஜெபியுங்கள். திருமதி. ஷைனி என்பவரின் குடும்பத்தில் தேவன் சமாதானம் கட்டளையிட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **என். திருவேங்கிடபுரம்** **செப்டம்பர் 11**

சகோ. குழந்தைவேலு என்ற பீட்டருக்கு அடிக்கடி வரும் மயக்கத்தில் கீழே விழுந்து அடிபடுவதிலிருந்து பூரண விடுதலை கிடைக்க ஜெபியுங்கள். சகோதரர். அறிவழகன் குடிப்பழக்கத்திலிருந்து நிரந்தரமாய் விடுதலை கிடைக்க ஜெபியுங்கள். சகோ. ராஜன் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுக்க ஜெபியுங்கள். சகோதரி. ஜெனிபரின் குடும்பத்தில் சமாதானம் காணப்பட ஜெபியுங்கள். சகோ. இளங்கோ வேலைக்கு செல்வதற்கு டூவீலர் வண்டி வாங்குவதற்கு தேவன் உதவி செய்ய ஜெபியுங்கள்.

சகோதரர். ராஜனுடைய மனைவி, பிள்ளைகளுக்கு அடிக்கடி காணப்படும் சுகவீனங்கள் மாற ஜெபியுங்கள். சகோதரி. குரும்மாளின் மூத்த தம்பியின் மனைவிக்கு சுகபிரசவம் உண்டாக ஜெபியுங்கள்.

பணித்தளத்திலுள்ள ஞானஸ்நானத்தொட்டி விரைவில் செப்பனிடப்பட்டு பயன்படுத்தப்பட ஜெபியுங்கள்.

சகோதரி. குருவம்மாளின் கணவர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானத்துக்கு தன்னை ஒப்புக்கொடுக்க ஜெபியுங்கள்.

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **திருக்களூர்** **செப்டம்பர் 12**

மானாட்டூர் – கிராமத்தில் நடைபெறும் சிறுவர் ஜெபக்குழுவில் அநேக சிறுவர்கள் கலந்து கொள்ள, பெற்றோர்கள் தடைகள் மாற ஜெபியுங்கள்.

செம்பூர் – கிராமத்தில் நடைபெறும் சிறுவர் ஜெபக்குழுவில் அநேக சிறுபிள்ளைகள் கலந்து கொள்ளுகிறார்கள். சிறுவர்கள் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

தேமான்குளம் – ஆண்டவரை மறைமுகமாக தேடுகிற நேசிக்கிற பிள்ளைகளின் வாழ்க்கையில், குடும்பங்களில் தேவன் பெரிய காரியங்களை செய்ய ஜெபியுங்கள்.

பால்குளம் – ஆண்டவரை தேடுகிற குடும்பங்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பிரச்சனைகள் மாறவும் கணவர்கள் அதிகாமாக மது பழக்கத்தில் அடிமைப்பட்டு இருப்பதால் இந்த பழக்கத்தில் முற்றிலும் மாறுபட்ட விடுதலை தேவன் கட்டளையிடும்படி ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

**குமாரபுரம்** – சகோதரி ஏஞ்சல், பெனிட்டா, ஜெயசீலி இவர்களின் படிப்பு ஆசீர்வதிக்கப்பட, ஜெபக்குழு இன்னும் வளர்ச்சியடைய ஜெபியுங்கள்.

**செபத்தையாபுரம்** – ஜெபக்குழுவில் கலந்துகொள்ளும் பிள்ளைகள் இயேசுவோடு இனிய மாலைக்கு கடந்து வரவும், சகோதரர் டேனியல் குடும்பத்தில் வீடு கட்டப்பட ஜெபியுங்கள்.

**கண்ணான்டிவிளை** – சகோ. ஜெயபாலன் குடும்பத்தை கர்த்தர் பலப்படுத்த ஜெபிப்போம். ஜெபக்குழுவிற்கு கடந்து வருகிற கரோலின், எமிமா, ரூபி, பிரின்ஸி படிப்பு ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஏரல்** – கனி சைக்கிள் கடை ஆசீர்வதிக்கப்பட... சகோதரர் சுந்தர்ராஜ் குடும்பத்தைத் தேவன் பலப்படுத்த, சகோதரி. கிளாரியா குடும்பம் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட.... சகோதரி. ராதா ஆசிரியை குடும்பம்இரட்சிக்கப்படவும், கிளாரியா சகோதரியின் கணவர் மோசஸ் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

Engg. College Hostel - படிக்கிற பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட, வார்டன் அம்மாவைக் கர்த்தர் பலப்படுத்த, நல்ல சமையல் அம்மாவைக் கர்த்தர் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

**ஏர்காடு தெரு** – ஜெபிக்கும்படி கடந்து வருகிற பிள்ளைகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

VBS–ல் கலந்து கொண்ட பிள்ளைகள் கர்த்தரால் வழிநடத்தப்படவும், ஊழியத்திற்கு இம்மட்டும் தாங்கின ஜெபித்த குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

பணித்தம் : **தூத்துக்குடி – தாளமுத்துநகர்** **செப்டம்பர் 13**

சகோதரன் பாண்டி அவர்களின் கிட்னி பிரச்சனையிலிருந்து பூரண சுகம் உண்டாக... சகோதரன் பாலமுருகனிடத்தில் காணப்படும் பாவ சிந்தனைகளிலிருந்து தேவன் விலக்கிக் காத்துக்கொள்ள ஜெபியுங்கள்.

**தாளமுத்துநகரில்** சிறுவர் முகாம் நடைபெறுவதற்கு கர்த்தர் உதவி செய்ய ஜெபியுங்கள். சகோதரி. வெள்ளையம்மாள் மகள் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட



ஜெபியுங்கள். சகோதரி. மல்லிகா வீட்டில் வளர்க்கப்படும் ஆடுகளை தேவன் விருத்தியடைய செய்ய ஜெபியுங்கள். சகோதரி. மல்லிகா அவர்கள் விரும்பின படி கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பேட்மாநகரம்**

பின்மாற்றத்தில் காணப்படும் வாலிப சகோதரி கார்த்திகா இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். பேரூர் – சகோதரி. முத்து ஆராதனைக்கு தொடர்ந்து வர ஜெபியுங்கள். சுப்புலெட்சுமி தாயார் சரீரத்தில் காணப்படும் (மூட்டு, கை, கால்வலி) நீங்கும்படி ஜெபியுங்கள்.

**சுந்தரலிங்கநகர்** – சகோதரி. வசந்தி கூலி வேலை செய்கிறார். ஆராதனையில் கலந்து கொள்ள முடியாதபடி ஞாயிற்றுக்கிழமையில் வேலை நடைபெறுகிறது. தடைகள் மாற, லீவு கிடைக்க ஜெபியுங்கள்.

கிராம சுவிசேஷ ஊழியங்கள் நடைபெற இருக்கிறது. அநேக குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். சகோதரி. சுப்பு அவர்களின் கணவர் நைனார் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. முத்துலெட்சுமி 5 மாதம் கர்ப்பமாக இருக்கிறார்கள். இரத்தம் உடம்பில் மிகக் குறைவாக காணப்படுவதால் சரீர பலவீனம் மாற, தேவன் சுகப்பிரசவத்தை கட்டளையிட ஜெபியுங்கள். சகோதரி. ஏஞ்சல் அவர்களுக்கு வீடுகட்டுவதற்கான பணத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி. குமாரி நன்றாக படிக்க, ஞானஸ்நானம் எடுக்க ஜெபியுங்கள். சகோதரன் சிஸான் 10ம் வகுப்பு படிக்கிறான். அவன் நன்றாக படிக்க ஜெபியுங்கள். ஊழியரின் மகன் ஜாண் டேனியல் +2 படிக்கிறான். எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண் எடுக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தாதன்குளம்** **செப்டம்பர் 14**

சகோதரி. பிரியாவின் தகப்பனார் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கிடைக்கவும் தாயாருக்கு சரீரத்தில் காணப்படும் பெலவீனங்கள் மாற, குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**கருங்குளம்** – வாலிபர் ஜெபக்குழு தொடர்ந்து நடைபெறவும் தடைகள் மாற, அநேக வாலிபர்கள் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

**காரசேரி –** சுந்தராஜி என்ற மாணவி 11ம் வகுப்பு படிக்கிறாள். தேவன் ஞானத்தை தரும்படியாக இவர்கள் குடும்பம் இரட்சிக்கும்படியாக ஜெபியுங்கள்.

**சினார்குளம்** – சகோ. இன்னாசிபாண்டி கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து தீய வழியில் நடந்து கொண்டிருக்கிறான். தேவன் இந்த சகோதரனை இரட்சித்து தீயவழியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தட்டப்பாறை**

ஒவ்வொரு வாரம் சனிக்கிழமை விசுவாசிகள் வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்தப்பட...

மேலத்தட்டப்பாறை, தெற்கு சிலுக்கன்பட்டி இரண்டு கிராமங்களிலும் ஞாயிறு ஆராதனை நடைபெற

நன்மையை பெற்றுக்கொண்ட மக்கள் இழப்புகளை வாழ்க்கையில் சந்திக்கிறதினால் ஆலயத்திற்கு வருகிறதில்ல அவர்கள் தொடர்ந்து ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள்.

சுடலை என்ற சகோதரர் ஆலயத்திற்கு வருவதற்கு உள்ள தடைகள் நீங்க... சகோ. மோசஸ் அவர்கள் குடும்பத்தில் துக்கத்தில் இருந்து முழுவதும் சந்தோஷமடைய ஜெபியுங்கள்.

பணித்தளம் : **புதுக்கோட்டை** **செப்டம்பர் 15**

**வாகைக்குளம்** – பிரின்ஸி என்ற சகோதரியினுடைய அண்ணனுக்கு கேன்சர் வியாதியிலிருந்து சுகம் கிடைக்க... சகோதரி. செல்விக்கு ஏற்ற துணை கிடைக்க ஜெபியுங்கள்.

**கோரம்பள்ளம்** – வாலிபர் முகாம் நடைபெறுவதற்கு காணப்படும் தடைகள் மாற, வாலிபர் ஜெபக்குழுவில் வாலிபர்கள் கடந்து வர ஜெபியுங்கள்.

**புதுக்கோட்டை** – சகோதரி. வினிதா, அகிலா ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர, சகோதரி. ஏஞ்சலுக்கு ஏற்ற துணை கிடைக்க, அற்புதத்தின் மாலைக்கு அநேக பெரியவர்கள் கடந்து வர ஜெபியுங்கள். மாணவர் முகாம் நடைபெற ஏற்ற இடம் கிடைக்க ஜெபியுங்கள். சகோதரி. வசந்திக்கு ஏற்ற துணை கிடைக்க ஜெபியுங்கள்.

அத்திமரப்பட்டி – வாலிபர் முகாம் நடைபெற, சகோதரி. பிரியாவிற்கு ஏற்றதுணை கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **தூத்துக்குடி (பிரமுத்துவிளை)** **செப்டம்பர் 16**

ஜாஸ்மின், மேரி வசந்தி, பாலின்கமல், ஜெபா பிரியா இவர்களின் திருமணத்திற்காக ஜெபியுங்கள். எஸ்தர் என்ற தாயாருக்கு கண் ஆப்ரேஷன் செய்யும் கண்ணில் உள்ள நரம்பில் ஊசி பட்டுவிட்டதால் மூன்று மாதம் கழித்து மறுபடியும் கண் ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். தேவை 25,000 சந்திக்கப்படவும் கண் பார்வை கிடைக்க ஜெபியுங்கள்.

மோகனவள்ளி, சுமதி, ஜெயலெட்சுமி இவர்கள் திருமணத்தின் காரியங்கள் நடைபெற ஜெபியுங்கள். பொன்னுத்தாய் என்ற சகோதரிக்கு சொந்தமாக இடம் அரசரடியில் 9 செண்ட் இடம் உள்ளது. 3 இலட்சம் கடனை அடைக்கவும், வீட்டில் உள்ள தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

ஆண்டாள்நகர் பணித்தளத்தில் மேல்கூரை போடவும், ஆலயத்திற்கு முன்பு ஆஸ்ப்ட்டா சீட் போடவும், ஆலயத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டி முடிக்கப்படவும் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**திம்மராஜபுரம்** – சகோதரி. பானுமதிக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் கொடுக்க

**முதியோர் இல்லம்** – சகோதரி. ஜெகஜோதிக்கு நல்ல வேலை கிடைக்க

பணித்தளம் – **ஸ்ரீமூலக்கரை** **செப்டம்பர் 17**

அக்கினிமாரி மகன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெறவும் குடும்பமாய் சபைக்கு கடந்து வர ஜெபியுங்கள்.

**திருப்புளியங்குடி** – ஆலய கட்டுமான பணிக்கு ரூ. 2,50,000 தேவை சந்திக்கப்பட, ஜெபிக்க கடந்து வருகிற வாலிபர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர, சகோதரி மதியரசிக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதித்து கொடுக்க ஜெபியுங்கள்.

செந்தூர் என்ற சகோதரனுக்கு இடுப்பிற்கு கீழ் செயல்இழந்து இருக்கிற உறுப்புகள் செயல்பட, குடும்பமாய் சபைக்கு கடந்துவர ஜெபியுங்கள்.

செண்பழனி, ராஜம்மாள் குடும்பம் சபைக்கு கடந்து வர ஜெபியுங்கள்.

பணித்தளம் : **வடமலாபுரம்** **செப்டம்பர் 18**

சகோ. சங்கர் மகனுக்கு திருமண காரியத்தை கர்த்தர் வாய்க்க பண்ண... ஒரு கிறிஸ்தவ பெண் கிடைக்க.... சகோ. அருணாசலம் அவர்களுக்கு நெஞ்சுவலியிலிருந்து விடுதலை கிடைக்க.... சகோ. சூசைமணி கால் தடுக்கி கீழே விழுந்து காலில் பலத்த அடிப்பட்டு விட்டது. இப்பொழுது ஆப்ரேஷன் செய்து இருக்கிறார். நல்ல சுகம் கிடைக்க... பேச்சிமுத்து சொர்ணத்தாய் இவர்களுடைய வியாதி நீங்க ஜெபியுங்கள்

**சமுத்துவபுரத்தில்** – சகோ. போவாஸ் கடன் பிரச்சனை மாற...



பணித்தளம் : **அழகப்பபுரம்** **செப்டம்பர் 19**

கீழ்குளம் – சகோ. சுந்தர்ராஜன் அவர்களின் மகன் பிரேம்நசீர் என்பவருக்கு திருமணமாகி மூன்று மாதங்களே ஆகியுள்ளது இவருக்கு புற்று நோய் இருக்கிறது. இந்த வியாதியிலிருந்து தேவன் சுகதரும்படியாய்....

பணித்தளம் : **அய்யனேரி**

**புளியங்குளம்** – சகோதரி. சுப்புலெட்சுமி மகன் மகேஸ்வரன் மகள் வனிதா திருமணம் ஆகி 5 வருடம் ஆகிறது கர்ப்பத்தின் கனிக்காக.... சகோதரி. யசோதை குடும்பம் இரட்சிக்கப்பட.... இவர்கள் மகன் சங்கரநாராயணன் படிப்புக்கேற்ற வேலை கிடைக்க.... சகோ. முருகனுக்கு சிறுநீரகத்தில் பிரச்சனை இருக்கிறது. தேவன் நல்ல சுகம் கொடுக்க.... சகோதரி. சேர்மக்கனிக்கு கர்த்தர் நல்ல பூரண வளர்ச்சியுள்ள குழந்தையை கொடுக்கும்படிக்கு....

**ஆண்டிப்பட்டி** – சிறுவர் கூடுகை தடையாக இருக்கிறது. கர்த்தர் திறந்த வாசலை உண்டாக்க....

**சிப்பிப்பாறை** – சகோதரி. செல்வமணிக்கு 3 மாதமாக இருக்கின்ற இருமல் சுகமாக... சகோதரி. ருத்ராணி சரீரத்தில் காணப்படும் பெலவீனம் மாற....

பணித்தளம் : **அப்பனேரி** **செப்டம்பர் 20**

சிவா, ராணி இவர்களுடைய அப்பா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை அடைய... சகோதரி மரியம்மாள் குடும்பத்தில் உள்ள கடன் பிரச்சனை மாற... ஆரோக்கியராஜ், எஸ்தர் செய்கிற தொழிலை கர்த்தர் ஆசீர்வதிக்க.... அப்பனேரி ஆலயத்திற்கு தேவன் புதிய ஆத்துமாக்களை தரும்படியாக ஜெபியுங்கள். ஆலயத்தில் முள்வேலி அமைக்க ஜெபியுங்கள். இந்தப் பகுதியில் சுவிஷேசம் சொல்வதற்கு தடைகள் மாற... சிவா, பார்த்துபன் இவர்களை தேவன் சந்திக்கும்படியாய் ஆலயத்திற்கு கடந்துவரும்படியாய்

பணித்தளம் : **மைப்பாறை**

ஆலய பிரதிஷ்டை 21ம் தேதி ஆசீர்வாமாய் நடைபெற... சபைக்கு வருகிற எல்லா விசுவாசிகள் கலந்து கொள்ள.... ஜெயமணியம்மாள் வீட்டில் மருமகள், மகன் எல்லாரும் சமாதானமாயிருக்க ஜெபியுங்கள். வேதவல்லியம்மாள் கண் ஆப்ரேஷன் செய்திருக்கிறார்கள். நல்ல சுகம் கிடைக்க... கொண்டல்ராஜ் – பாக்கியலட்சுமி இவர்கள் குடும்பம் புதிதாக ஆலயத்திற்கு வருகிறார்கள். இவர்கள் தொடர்ந்து வரும்படியாய்

**செப்டம்பர் 21**

**குகன்பாறை** – சண்முககனி இவர்களுக்கு சமாதானம் கிடைக்க... இவர்களுடைய கடை நன்றாக வியாபாரம் நடைபெற.... இவர்களுக்கு எல்லா பெலவீனங்கள் மாறி சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

**நரிக்குளம்** – அஞ்சலி என்ற சகோதரிக்கு நுரையீரல் பாதிக்கப்பட்டு இறந்து போனார்கள். இவர்களுடைய குடும்பத்தில் ஆறுதல் உண்டாக... இவர்கள் சோர்ந்து போகாதபடி ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள்.

பணித்தளம் : **அப்பனேரி**

சகோதரி. கனகலெட்சுமிக்கு குழந்தை பாக்கியம் ஏற்பட.... தேவராஜ் சுந்தரி இவர்கள் முழுமையாக இயேசுவை ஏற்றுக்கொள்ள... ராஜு எஸ்தர் தடையில்லாமல் ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள். சகோதரி. லோகமாதாவுக்கு கர்த்தர் ஒரு வீட்டை கொடுக்கவும், குடும்பத்தை ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள். சகோதரி. பரிமளத்திற்கு சுகப்பிரசவம் உண்டாக.... சகோ. முத்துக்குமார் இரட்சிக்கப்பட.... குடும்பமாய் ஆலயத்திற்கு கடந்து வர

## செப்டம்பர் 22

பணித்தளம் : **திருவேங்கடம்**

**சின்னகாளான்பட்டி** – இந்த கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்காக வாங்கப்பட்ட நிலத்தின் மீதமுள்ள தேவை (ரூ. 2 லட்சத்து 35 ஆயிரம்) சந்திக்கப்பட.... இங்கு ஆராதனைக்கு வருகிற வேலுச்சாமி, மாரியப்பன் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். செல்லத்தாய் கட்டுகிற வீடு தடையின்றி கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**வெள்ளாகுளம்** – சகோதரி சத்தியா இயேசுவை ஏற்றுக்கொள்ள... சிறுபிள்ளைகள் தடையின்றி ஆராதனையில் கலந்து கொள்ள... செல்லம்மாள் சரீரத்திலுள்ள பலவீனம் நீங்க ஜெபியுங்கள்.

சத்திரப்பட்டி – தேவபிச்சை மகனுக்கு திருமண காரியம் கைகூடி வர.... மூத்தமகன் இயேசுவை ஏற்றுக்கொள்ள... ஜெயபால் துர்உபதேசத்திலிருந்து விடுதலை பெற

**செல்லம்பட்டி** – வெள்ளச்சாமி குடும்பத்தில் தேவன் சமாதானம் கட்டளையிட

**மேலைமறைநாடு** – ஜீவிதாவிற்கு நல்ல கம்பெனியில் வேலை கிடைக்க....

## செப்டம்பர் 23

பணித்தளம் : **திருவேங்கடம்**

இங்கு நடைபெறுகிற அற்புதத்தின் மாலை ஜெபத்தில் அநேகர் கடந்து வர ஜெபியுங்கள். ஆராதனையில் கலந்து கொள்ளுகிற ஜனங்களுக்குள் காணப்படுகிற நிர்விசாரத்தின் ஆவியை தேவன் எடுத்து போட ஜெபியுங்கள். மேரியின் திருமண காரியத்திற்காக.... இங்கு ஆலயம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியாளரிடம் அனுமதி கிடைக்க

**திருங்வேங்கடத்தில்** நடைபெறுகின்ற ஆராதனையில் கலந்து கொள்கிற வாலிபர்கள் இரட்சிக்கப்பட.... தலைவன்பட்டி – பெரியசாமி குடும்பமாய ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

## செப்டம்பர் 24

பணித்தளம் : **முக்கூட்டுமலை**

சகோ. துரை மகேஷ் குடும்பத்தில் உள்ள பிரச்சனை மாற

**ஆண்டிப்பட்டி** – தங்கஜோதி மகளுக்கு கை, காலில் நல்ல சுகம் கிடைக்க...

**மேலப்பட்டி –** சகோதரி. கௌசல்யாவுக்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க

**கஸ்தூரி ரெங்கபுரம் –** கணேசன் – மல்லிகா இவர்கள் குடும்பம் பிரிந்து இருக்கிறது. இவர்கள் சமாதானமாக....

**பாறைப்பட்டி** – சகோ. முத்து இருளாண்டி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை அடைய....

### திருச்சி மாவட்டம்

## செப்டம்பர் 25

பணித்தளம் : **மஞ்சம்பட்டி**

டேம் நாலுரோட் ஜேம்ஸ் அவர்களுக்கு அரசு பேரூந்தில் நடத்துனர் நேர்முகத் தேர்விற்காக அழைப்பு வந்துள்ளது. வேலை கிடைக்க ஜெபியுங்கள். ஜோதி அவர்கள் மகன் வின்செண்ட் திருமணம் ஒழுங்காககவும், கடன் பிரச்சனையிலிருந்து விடுதலையடைய....

**தோப்புப்பட்டி** – சகோ. மணி, சேவியர் இவர்கள் ஆராதனைக்கு வராமல் பின் வாங்கியுள்ளனர். இவர்கள் மனந்திரும்ப ...



**பிச்சைமணியாரம்பட்டி** – திவ்வியநாதன் இவர்கள் மகனுக்கு நல்ல வேலைகிடைக்க..

**மலையடிப்பட்டி** – ஆரோக்கியராஜ் அவர்கள் மகன் சாலமோன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம். சாந்தி அவர்கள் மகன் சில்வர் 10ம் வகுப்பில் நல்ல மார்க் எடுத்து வெற்றி பெற....

**நா. பூலான்பட்டி –** சேகர் அவர்கள் மாருதி ஆம்னி விபத்துக்குள்ளாதின் நிமித்தம் காணப்படும் கடன்பாரத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**கானப்பாடி புதூர் –** ஞானப்பிரகாசம் அவர்கள் மகன் விக்டர் தினகரனுக்கு திருமணம் ஒழுங்காக.... தெரசால் அவர்களுக்கு இருக்கும் ஆஸ்துமா வியாதியிலிருந்து விடுதலை பெற பாரத்துடன் ஜெபிப்போம். தோகமலை குணசீலன் அவர்கள் பணி ஓய்வுபெற்று ஓராண்டுகள் ஆகியும் அரசு கொடுக்க வேண்டிய எந்த பணம் மற்றும் பென்சன் கிடைக்காமல் தடைபட்டுள்ளது. சீக்கிரம் கிடைக்க ஜெபிப்போம்.

## செப்டம்பர் 26

பணித்தளம் : **மஞ்சம்பட்டி**

**தோப்புப்பட்டி** – சூசை அவர்கள் மகன் ராபின் அருண் மற்றும் சோபியா இரட்சிக்கப்படவும் ஆலயம் வரவும் ஜெபிப்போம்.

**கல்லாத்துபட்டி** – பிச்சையம்மாள் அவர்கள் இரத்த சுத்திகரிப்பு செய்யப்பட மாதாமாதம் செல்லும் இந்த நிலையிலிருந்து பூரண சுகம் உண்டாக....

**மஞ்சம் பட்டி** – தெரசுமேரி ஆஸ்மா வியாதியிலிருந்து பூரண சுகம் பெற... மம்மத்தை ஜெசிந்தா ஆசிரியர் அவர்கள் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்காக காத்திருக்கிறார்கள். அது சீக்கிரம் கிடைக்க...

**மணப்பாறை** – இராஜகோபால் அவர்கள் மகன் டேனியல் மற்றும் மகள் சுலெக்சனா திருமணம் ஒழுங்காக....

பணித்தளம் : **தொட்டம்பட்டி**

அழகர் சாமிக்கு காலில் உள்ள புன்கள் சுகமாக ஆராதனைக்கு பெரியவர்கள், வாலிபர்கள், கடந்துவர ஜெபிப்போம்.

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி**

சகோ. செல்வம் வீட்டிற்கு தண்ணீர், மின்சார பிரச்சனைகள் மாற... ராஜபாண்டி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... சுகந்தி, சுமித்ரா, அழகுசுந்தரி, அருண், சந்தோஷ், பாண்டிமீனா ஆகிறோர் ஞானஸ்நானம் எடுக்க.... மனந்திரும்ப வேண்டும் இதற்காக...

**அப்பாவு பிள்ளைபட்டி** – லீலா, செல்வி, செல்வராணி ஆகியோருக்கு திருமணமாக... பராசக்தி தன் கணவருடன் இணைந்து வாழ.... கோபி மனநிலை சுகமாக....

**கோடங்கி நாயக்கன்பட்டி** – சகோ. பால்ச்சாமியின் குடும்பம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட.... ஆனந்த ஜோதிக்கு திருமணத் தடைகள் மாற... வெள்ளையன் குடும்பத்தில் சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.

## செப்டம்பர் 27

**அப்பி நாயக்கன்பட்டி** – சகோ. அழகர்சாமி இழப்பு வியாதி சுகமாக நன்றாக நடக்க ரோஜாராணி, பரத், அருண் மோகனப்பிரியாவின் பெற்றோர் இரட்சிக்கப்பட ராஜாங்கம் மனைவிக்கு சுகப்பிரசவம் உண்டாக ஜெபிப்போம்.

கோட்டூர் – சிறுவர், வாலிபர் கூடுகையை தொடர்ந்து தேவன் ஆசீர்வதித்து தர

தோட்டக்காரன்பட்டி – அழகம்மாள் கண்வலி சுகமாக சின்னத்தாய் எழுந்து நடக்க சூரியா கால்எலும்பு முறிவு முற்றிலும் சுகமாக ஏற்ற வேளையில் திருமணம் நடக்க.... முத்துவுக்கு குழந்தை பாக்கியம் உண்டாக... ராமலட்சுமி என்ற சிறுமி நன்றாக பேச நல்ல மனநிலை உண்டாக...

**செல்வநகர்** – சகோதரி. ராசம்மாளுக்கு குறுக்கு வலி சுகமாக... வெள்ளையம்மாள் கணவருடன் இணைந்து வாழ.... சுப்பிரமணியன் 11ம் வகுப்பு படிக்க வழிவாசல் திறக்கப்பட, இவன் தாயார் ராக்கம்மாள் வயிற்று கேன்சர் சுகமாக, டாக்டர் முடியாது என்றதால் தேவன் அற்புத சுகம் கொடுத்து ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுக்க

பணித்தளம் **விராலிப்பட்டி**

## செப்டம்பர் 28

ஆலய ஆராதனைக்கு வருகிறதான வாலிபப்பெண்கள், கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட... படிக்கிற சிறுவர்கள் கர்த்தருக்குப் பயந்து வாழ்கிற வாழ்க்கை உண்டாக ஜெபிப்போம். இன்னும் அநேக சிறுவர்கள், வாலிபர்கள் வர

ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்று ஆலயம் வராமல் இருக்கிறார்கள். சகோதரி. இந்திராணி, சுந்தரி, பிரவினா, மாரிஸ்வரி இவர்கள் மறுபடியும் ஆலயத்திற்கு வர.... சகோதரி. மகுடிஸ்வரிக்கு கர்த்தர் சுகப்பிரசவத்தை கொடுக்க.... ராணி – சேகர் திருமணம் ஆகி 7 வருடம் ஆகியும் குழந்தையில்லை. தேவன் கர்ப்பத்தின் கனி கொடுக்க... கீதா – முத்துராமன் இவர்கள் திருமணம் ஆகி 8 ஆண்டு ஆகிறது இவர்களுக்கு கர்த்தர் ஒரு குழந்தையை கொடுக்க.... மீனா – பாண்டி இவர்களுக்கு திருமணம் ஆகி அதிக வருடம் ஆகியும் குழந்தையில்லை இவர்களுக்கு தேவன் ஒரு கர்ப்பத்தின் கனியை கொடுக்க... கலாவதி – ராஜா இவர்கள் திருமணம் ஆகி பிரிந்து வாழ்கிறார்கள். இணைந்து வாழ.... சித்ரா – பாண்டி திருமணம் ஆகி 5 வருடம் ஆகியும் குழந்தையில்லை. இவர்கள் இணைந்து வாழ.... கர்த்தர் குழந்தை பாக்கியத்தை கொடுக்க....

## செப்டம்பர் 29

சகோதரி. முருகேஸ்வரி அவர்கள் குடும்பமாய் வாழ.... இவர்கள் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க.... குடும்பமாய் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

சகோதரி. சுப்புலெட்சுமி கணவர் முருகன் – குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையாக, இரட்சிக்கப்பட... இவர்கள் குடும்பத்தில் சமாதானம் உண்டாக....

மீனாட்சிபுரம், கோயில்பட்டி, தம்பிநாயக்கன்பட்டி – இந்த கிராமத்தில் கைபிரதி கொடுத்தால் நமக்கு முன்னால் அதை கிழித்து எறிந்து விடுகிறார்கள். இந்த கிராமத்திலுள்ளவர்கள் மனந்திரும்ப, இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## செப்டம்பர் 30

சகோ. பாண்டி ஜேம்ஸ்க்கு கர்த்தர் ஒரு நல்ல வீட்டை கொடுக்கவும், அவர்கள் தொடர்ந்து ஆலயத்திற்கு வரவும், சகோதரன் ஜெயகொடிக்கு நல்ல வேலை கிடைக்கவும்

சகோ. இராமகிருஷ்ணன் பிறந்ததிலிருந்து இடதுகால்,இடதுகை செயல்படாமல் இருக்கிறது. இவருக்கு கர்த்தர் நல்ல சுகத்தை கொடுக்க... சகோ. பிரபு வாய் பேசாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு சுகம் உண்டாக ஜெபிப்போம். சகோ. ராமலிங்கம், பாலகிருஷ்ணன், சகோதரி. முத்தம்மா, ரெஞ்சினி, தங்கபாண்டி, ஜெயக்கொடி இவர்கள் ஞானஸ்நானம் எடுத்து சபைக்கு வராமல் இருக்கிறார்கள். இவர்கள் மறுபடியும் ஆலயத்திற்கு வர ஜெபிப்போம்.



### திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **தொட்டிபாளையம்**

சகோதரி. மிரியாமுக்கு சிறுநீரக கல் வெளியேற ஜெபிப்போம். சீக்கிரம் ஆலய கட்டட வேலை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம். சகோ. விஸ்வநாதனுக்கு திருமண காரியம் வாய்க்கப்பண்ண.... சகோ. நாகராஜுக்கு கால் தொடையில் உள்ள கட்டி நீங்க ஜெபிப்போம். சகோதரி. பத்மா கணவர் செல்வராஜ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையாக ஜெபிப்போம்.

---

## சென்னைக்கு வந்த ரயிலில் தீ விபத்து – தினகரன் 01-08-2012

எத்தனை நிந்தைகள் இவ் மனுக்குலத்துக்கு
ரயில் பெட்டிக்குள் தீ ... பயணிகளின் பெட்டி பிணங்களின் பெட்டியாய்
ஐயோ.... கூக்குரல்... அழுகை பெலனற்றுப்போகும் வரை அழுகை
சிந்தித்துப் பார்த்தேன்.... சிதைந்து போனதே மிச்சம் .....
இறைவனே... ஆண்டவனே.... கடவுளே.... ஏன் இந்த கொடுமை
வெள்ளம் வடிந்தது போல அமைதி.... புயல் நின்றது போல மவுனம்...
திகைத்து நின்ற மனிதர்களின் ஓட்டம் மீண்டும் ஆரம்பம்
எதையும் ஜீரணிக்கும் மனிதன் இதையும் மறந்து விட்டான்
ஒன்றை தேட மட்டும் மறந்து விட்டோம் ஆம்
எரிந்த சரீரத்துக்குள் இருந்த எரியாத அந்த ஆத்துமா
ஒழிந்து போகும் சரீரத்தை இயக்கும் அழியா ஜீவன்
மனுக்குலமே நினைவில் கொள் மானிடனே கருத்தில் கொள்
இந்த மரணமோ தற்காலிக வலி .... இனி வரும்....
இரண்டாம் மரணமோ நித்திய வலி
தேடு தேடு இரண்டாம் மரணத்திற்கு தப்பிட வழி
தேவனாம் இயேசுவோடு உனை இணைத்திட
தேவன் இல்லை என்று மதிகேடன் ஆம் தன்
மதிகெட்ட இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்....

**Er. A. ஜெயபால்**
Tuticorin.

---

## செய்திகள்

- உலகில் நடக்கும் குழந்தை திருமணங்களில் 40% இந்தியாவில் நடப்பதாக UNICEF அறிக்கை கூறுகிறது.
- தமிழ்நாட்டில் 24 சதவிகித பெண்கள் 18 வயதை அடையும் முன்னரே திருமணம் செய்து கொடுக்கப்பட்டதாக 2007 - 2008 குடும்ப கணக்கெடுப்பு கூறுகிறது.
- கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில் குழந்தை திருமணம் தமிழகத்தில் அதிகமாக நடைபெறுகிறது.
- ஆஸ்திரேலியாவை தாயகமாக கொண்ட ஈமு என்ற நெருப்பு கோழி பறக்க இயலாத ஒரு கோழி இனமாகும். 6.5 அடி உயரம் வளரக்கூடியதும், 45 கிலோ எடை கொண்டதுமான பறவை பறக்கமுடியாதது ஆனாலும் ஒரு மணிக்கு சுமார் 50 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியவை. இதோ வணிக முக்கியத்துவமிக்க பறவை. இதிலிருந்து விலைமதிப்புமிக்க எண்ணெய் எடுக்கப்படுகிறது. மற்றும் இதன் தோல், நகம், முட்டை ஆகியனவும் வணிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

# குறைவுகளை நிறைவாக்கும் தேவன்

பா. பொற்செல்வன் ஆசீர்

**வனாந்தரமும், வறண்ட நிலமும் மகிழ்ந்து கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல் செழிக்கும். ஏசா. 35:1.**

தேவாதி தேவன் நம்மைப் பார்த்து சொல்லும் அருமையான வார்த்தை இது. வனாந்திரம், வறண்ட நிலம் கடுவெளி என்ற மூன்றும் யாரும் விரும்பாத தேடாத காரியங்களை இங்கு தேவன் மகிழச் செய்து (glad) களிக்கச் செய்து (Rejoice) செழிப்பாக்குவேன் (blossom) என்று வாக்குப் பண்ணுகிறார்.

வனாந்திரம் (wilderness) என்பது தண்ணீரற்ற, வாழ்விற்கு பயன்படாத இடமாகும். வனாந்திரத்தின் வெப்பம் தாங்கொண்ணாதது. தாவரங்களை காண்பதும் அரிது. அது போன்று மனதை குளிரப்பண்ணாத, விரும்பப்படாத எந்த செழிப்பும் இல்லாத வாழ்வை குறிப்பது வனாந்திரம். உங்கள் வாழ்வு அல்லது குடும்பம் அல்லது தொழில் அல்லது பிள்ளைகளின் உங்களின் எதிர்காலம் இப்படித் தோன்றலாம். தேவன் அதை மகிழவும், களிக்கவும் செழிப்பாக்கவும் செய்வேன் என்கிறார்.

வறண்ட நிலம் (waste land) தண்ணீரற்ற நிலத்தைப் பார்த்திருப்பீர்கள். தேவையான மழையும், தண்ணீரும் இல்லாததால் பயிரிட்டு செழிக்க வேண்டியது, வறண்ட வெடிப்பாகி எந்த பசுமையும் இல்லாது தாய்க்காக ஏங்கும் பிள்ளை போல மழையை நாடி ஏங்குவது போல் இருக்கும் நிலம் தான் வறண்ட நிலம்.

உங்கள் வாழ்வும் செழித்திருக்க வேண்டியது ஆனால் ஏன் செழிப்பில்லை? ஆசீர்வதிக்கப் பட வேண்டியது ஆனால் ஏன் ஆசீர்வாதம் இல்லை என்ற கேள்வியோடு காணப்படுகிறதா? தேவன் அதை மகிழவும், களிக்கவும், செழிப்பாக்கவும் செய்வேன் என்கிறார்.

கடுவெளி (desert) வனாந்திரம் போல அங்கு இல்லை. வறண்ட நிலத்திலும் தண்ணீர் கிடைத்தால் பயிரிட கூடிய மண் உண்டு. இங்கோ அதுவும் இல்லை. இங்கே மழை பெய்தாலும் கூட செழிப்படையாது. தண்ணீர் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட பயிரிட ஏற்றது அல்ல. உங்கள் வாழ்விலோ, பிள்ளைகளிலோ, தொழிலிலோ என்ன உதவி செய்தாலும் என்ன முயற்சி செய்தாலும் அசீர்வாதம் முன்னேற்றம் விடுதலை கிடைக்காது. டாக்டர்கள் முடியவே முடியாது என்று கூறி விட்டார்கள். என்ன செலவு செய்தும் பயனில்லை என்கிறார்கள். என்பதுதான் உங்கள் நிலையா?

கர்த்தர் இயேசுகிறிஸ்து சொல்கிறார் மகிழச் செய்வேன்; களிப்பாக்குவேன் புஷ்பத்தைப்போலச் செழிப்பாக்குவேன் என்று! விசுவாசியுங்கள்! சுதந்தரியுங்கள்!

### ஏன் குறைவு வருகிறது

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து, பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ, ஒரு நன்மையும் குறைவுபடாது. சங். 34:10.

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். சங். 23:1 என்றெல்லாம் பரிசுத்த வேதத்தில் தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கும் போது ஏன் நமக்கு குறைவு வருகிறது என்ற கேள்வி அநேகரை வாட்டுகிறதை கண்டு இருக்கிறேன். இப்படி குறைவு ஏற்படும் போது தேவன் நம்மோடு இல்லையா என்று கலங்குகிறோம்.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன். யோவான். 16:33 என்ற இயேசுவின் வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள்.

### குறைவில் இயேசுவின் பிரசன்னம்

இயேசுவும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டு வந்திருந்த யோவா. 2:1-11. கலியாண



வீட்டில் திராட்ச ரசம் குறைவு பட்டது என்று காண்கிறோம். இயேசு இல்லாததினால் இங்கு குறைவு ஏற்படவில்லை. இயேசு இருந்த போதும் குறைவு ஏற்படுகிறது. எனவே உங்கள் வாழ்வில் குறைவு வரும் போது, இயேசு என்னை கைவிட்டு விட்டாரோ எனக் கலங்காதிருங்கள். குறைகளை தீர்க்கும் இயேசுவை காணுங்கள். குறைவையே சொல்லிக் கொண்டே இராதிருங்கள்.

குறைவு இயேசு உங்களை கைவிட்டு விட்டார் என்பதில் அடையாளமல்ல. குறைவை நிறைவாக்கி முந்தின இரசத்திலும் (முந்தின நிலையிலும்) பிந்தின இரசமே (பிந்தின நிலையே) அதிக ருசியுள்ளதாக. (அதிக ஆசீர்வாதமாக) மாறும் என்பதின் அடையாளமே.

குறைவில் இயேசு உங்களை கைவிடவில்லை. உங்களோடு பிரசன்னமாயிருந்து உங்களை அதிக ஆசீர்வாதத்திற்குள் நடத்துவார் கலங்காதிருங்கள்.

### குறைவும் அவிசுவாசமும்

அவிசுவாசம் குறைவை கொண்டு வரும் என்பது உண்மைதான். மத். 17:19,20இல் சீடர்களுக்கு அவிசுவாசம் அவர்களை பிசாசை துரத்த கூடாமற் போகப் பண்ணினதை சுட்டிக் காட்டுகிறார். சீடர்களின் ஊழியத்தின் குறைவிற்கு காரணம் அவிசுவாசம் தான். அவிசுவாசத்தை ஜெயிக்க குறைவை நிறைவாக்க, பிசாசை ஜெயிக்க தேவை ஜெபமும் உபவாசமும் என்று இயேசு சீடர்களுக்கு மத். 17:21 கற்றுக்கொடுத்தார்.

### குறைவும் விசுவாசமும்

எல்லா குறைவுகளும் அவிசுவாசத்தால் வருபவவை அல்ல என்பதை நாம் உணர வேண்டும். எபிரேயர் 11ம் அதிகாரம் விசுவாசத்தை குறித்துப் பேசுகிறது. எபி. 11:33இல் விசுவாசத்தினால் சாதித்த சாதனைகள் தொடருகிறது. எபி. 11:35இல் அதே விசுவாசத் தினால் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு வாதிக்கப்பட்டதையும் அதை தொடர்ந்துபாடுகள் பட்டியல் நீண்டு இப்படி கூறுகிறது. குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள் என தொடர்ந்து நீள்கிறது பட்டியல்.

விசுவாச வாழ்வில் நமது விசுவாசத்தை காத்துக் கொள்ள துணிந்து செயல் படும்போது விசுவாசித்து அடியெடுத்து வைக்கும்போது நம் வாழ்வில் குறைவுகள் வரலாம். இதற்கு காரணம் பாவமோ, அவிசுவாசமோ அல்ல என்பதை நாம் அறிய வேண்டும்.

நாம் தேவனுக்காய் அர்ப்பணித்த அர்ப்பணிப்பில் நிலை நிற்க குறைவுகள் பாதையில் கடந்து வர வேண்டிய அவசியம் வரலாம்.

நாம் நம்முடைய பரிசுத்தத்தை காக்க துணியும்போது யோசேப்பைப் போல் குறைவை அனுபவிக்க வேண்டியது வரலாம்.

நாம் நமது உண்மையை காக்க துணியும்போது, தேவனுக்கு முன்பாக குற்றமில்லாது நிற்க விரும்பி வாழும் போது தாவீதைப் போல் சவுலால் வனாந்திரத்தில் துரத்தப்பட்டு குறைவை அனுபவித்தது போல நாமும் அனுபவிக்க வேண்டியது வரலாம்.

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2தீமோ. 3:12 என்பதை மறவாதிருங்கள்.

இப்படி துன்பம் வரும்போது குறைவு ஏற்படும் போது என் பாவமோ, என் அவிசுவாசமோ இயேசு என்னை கைவிட்டுவிட்டாரோ என்று கலங்காதிருங்கள்! திடன் கொள்ளுங்கள். உலகத்தை ஜெயித்த இயேசு உங்களோடு இருக்கிறார்.

இயேசு உங்கள் வாழ்வை மகிழ்ச்சி(glad)யாக்குவது நிச்சயம்

இயேசு உங்கள் வாழ்வில் களிப்பை (Rejoice) தருவது நிச்சயம்

இயேசு உங்கள் வாழ்வை செழிக்கச் (blossoms) செய்வது நிச்சயம்

வேதத்தில் குறைவை சந்தித்த ஒரு குடும்பத்தை 2இரா. 4:11-7 வசனங்களில் காண்கிறோம். அந்த குடும்பம் குறைவான நிலையிலே தேவனால் விட்டுவிடப்படவில்லை. தேவன் அந்த குடும்பத்தின் குறைவை நிறைவாக்கினார். அவர்களை உயர்த்தினார். எப்படி தேவன் அவர்களை உயர்த்தினாரோ அப்படியே நம்மையும் உயர்த்த வல்லவர். தேவன் பட்சபாதம் உள்ளவர் அல்ல.

தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவருடைய குடும்பம் கடன் பிரச்சனையில் சிக்கி தவித்தது. கடன்காரர்கள் இரண்டு குமாரரையும் அடிமையாக்க வந்து நெருக்குகிறார்கள். இக்குடும்பத்திலோ தகப்பனான அந்த தீர்க்கதரிசி மரித்துப்போனார். இந்த நிலையில் விதவையான தாய் தீர்க்கதரிசி எலிசாவை சந்திக்கிறாள்.

தீர்க்கதரிசி எலிசா வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றார். அதற்கு அந்த விதவைத் தாய் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்.

நீ போய் அநேக வெறும் பாத்திரங்களை கேட்டு வாங்கி வீட்டுக்குள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப்பூட்டி அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைந்ததை ஒரு பாத்திரத்தில் வை என்றார். அப்டியே எண்ணெயை எல்லாப் பாத்திரங்களிலும் வார்த்தார்கள். தீர்க்கதரிசி அதை விற்று கடனை தீர்த்து மீந்ததை வைத்து ஜீவனம் பண்ணுங்கள் என்றார்.

இந்த அற்புதத்தை செய்து குறைவை தேவன் நிறைவாக்க பயன்படுத்தி அந்த ஒரு குடம் எண்ணெய் எதை குறிக்கிறது என்று தியானிப்போம். அந்த ஒரு குடம் எண்ணெய் நமது வாழ்வில் இருக்க வேண்டிய 3 காரியங்களுக்கு அடையாளமாய் இருக்கிறது.

**கடுகளவு விசுவாசம் மத். 17:20, லூக். 176**

நமது வாழ்வின் மலை போன் பெரிய தேவைகளை, பிரச்சனைகளை ஜெயிக்க நமது வாழ்வில் நமக்கு தேவை கடுகளவு விசுவாசம்.

ஒரு மரத்தை தண்ணீரில் நடுவது என்பது கூடாத காரியம். இயற்கை அதை அனுமதிக்காது. ஆனால் சாதாரணமாக முடியாதவைகளை முடியும் என மாற்ற தேவன் கடுகளவு விசுவாசம் தான், தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது.

**கொஞ்சத்தில் உண்மை மத்.25:21**

நியாயத்தீர்ப்பில் தேவன் நம்மைப்பார்த்து சொல்லும் அருமையான வார்த்தைகளை வேதம் இப்படி சொல்கிறது. நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்பது அல்லவா பாருங்கள், தேவன் நம்மை உயர்த்த தாழ்விலிருந்து தூக்கி, நிறுத்த எதிர்பார்ப்பது கொஞ்ச காரியமானாலும் அதிலும் உண்மையாய் இருப்பதுதான் சிறிய காரியமானாலும் அதிலும் உண்மையாய் இருப்பது தான்.

**கொஞ்சம் புளித்தமா மத். 13:33**

பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது அதை ஒரு ஸ்திரி எடுத்து முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்று படி மாவிலே அடக்கி வைத்தாள்.

மூன்று படி மாவையும் புளிப்பாக கெட்டுப் போகாது பாதுகாக்க கொஞ்சம் புளித்தமா போதுமானது. அதுபோல சிறிய காரியமானாலும் நமது சாட்சியை காத்துக்கொள்ள ஜாக்கிரதையாய் இருப்பது மற்றவர்களையும் நம்மைப் போல சாட்சியாக மாற்றும் கொஞ்சம் புளித்தமா சாட்சியில் ஜாக்கிரதையாய் இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.

இந்த அனுவங்கள் குறைவை மாற்றும் தேவன் எதிர்பார்க்கும் நம்முடைய வாழ்வில் காணப்பட வேண்டிய தெய்வீக குணங்கள்.



**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

# திறப்பின் வாயில் ஜெபம்

**2012 செப்டம்பர் 26 கடைசி புதன்**

**காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : செப்டம்பர் 25 கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

| **ஜெபியுங்கள்** | **சகோ. B. பொற்செல்வன் ஆசீர் செய்தியளிக்கும் கூட்டங்கள்** |
|---|---|
| செப். 1 | உபவாச ஜெபம் CSI ஆலயம், புதுக்கோட்டை |
| செப். 3 | அற்புதத்தின் மாலை, ஆலங்குளம், நெல்லை மாவட்டம் |
| செப். 6, 7, 8, 9 | மைலோடு குமரி மாவட்டம் |
| செப். 27,28,29,30 | வேலூர் |

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.